| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 14/02/2024 | முதல் | 18/02/2024 |
| | அறிக்கை எண் : | 013/ 2024 | வெளியீட்டு நாள் : | 13/02/2024 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22° - 23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (08.02.2024 முதல் 12.02.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 18-02-2024- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08/02 | 09/02 | 10/02 | 11/02 | 12/02 | தேதி | நாள்-1 14/02 | நாள்-2 15/02 | நாள்-3 16/02 | நாள்-4 17/02 | நாள்-5 18/02 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 2 | 0 | 0 | 0 |
| 35 | 36 | 34 | 34 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 34 | 34 | 33 | 34 |
| 21 | 22 | 22 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 24 | 24 | 23 | 23 |
| 2 | 2 | 3 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 4 | 4 | 2 | 2 |
| 82 | 88 | 81 | 86 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 80 | 90 | 90 |
| 37 | 47 | 43 | 44 | 45 | | 50 | 50 | 40 | 50 | 50 |
| 9 | 9 | 12 | 12 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 8 | 10 | 10 |
| கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் பிப்ரவரி 14 மற்றும் 15 தேதி *மிக* லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 33°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23°-24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், *வட*கிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

14 மற்றும் 15ம் தேதியன்று மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் மிக லேசான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாலும் அதனை தொடர்ந்து வரும் 3 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளதாலும், விவசாயிகள் உங்கள் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும். அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவ

வாய்ப்புள்ளதால், உங்கள் கால்நடைகளை சூரிய உதயத்திற்கு 2 மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 8 முதல் 10 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (16 முதல் 22 பிப்ரவரி 2024):**

**மழைப்பொழிவு :**
நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் இயல்பை விட குறைந்தது முதல் இயல்பை ஒட்டிய லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது

**அதிகபட்ச வெப்பநிலை :**
16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**
16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும்.18° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, வெங்காயம், கால்நடை.**
**தக்காளி:**
காய்கறிப் பயிர்களில் வேர் முடிச்சு மற்றும் மொச்சை வடிவ நூற்புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. செடிகளுக்கு போதிய அளவு நீர் மற்றும் உரம் இட்டிருந்தாலும் பகல் நேரங்களில் வாடிக் காணப்படும். வேர் பகுதிகளில் வேர் முடிச்சுகள் காணப்படும்.

இதனை கட்டுப்படுத்த எக்டருக்கு 400 கிலோ வேப்பம் பிண்ணாக்கு இடலாம் மற்றும் கேந்தி பூப்பயிரை ஊடுபயிராக பயிர் செய்யலாம். மேலும் ஒரு எக்டருக்கு 2½ கிலோ பர்புரியோசிலியம் லில்லாசினம் என்ற உயிரினக் கலவையை 100 கிலோ தொழு உரத்துடன் கலந்து நீர் தெளித்து நிழலில் வைத்து 15 நாட்களுக்கு பிறகு காலை, மாலை நேரங்களில் வயலில் இடவேண்டும்.

**வெங்காயம்:**
சின்ன வெங்காயம் விதைப்பு செய்து கொண்டிருக்கும் விவசாயிகள் கவனத்திற்கு. வெங்காயப் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட், 1 கிலோ காப்பர் சல்பேட், 10 கிலோ மாங்கனீசு சல்பேட் ஆகிய மூன்றையும் 210 கிலோ குப்பையுடன் ஊட்டமேற்றி அடியரமாக இட வேண்டும்.
**கால்நடை:**

தற்போது நிலவும் வானிலையில் மாடுகளை அடைப்பான் நோய் தாக்க வாய்ப்பு உள்ளது. இந்நோய் தாக்கப்பட்ட மாடுகளுக்கு காய்ச்சல் இருக்கும். மாடுகளில் உணர்வு இழப்பு ஏற்பட்டு பிறகு இறந்து விடும்.
இறந்தவுடன் மூக்கு, வாய், ஆசனம் போன்றவற்றிலிருந்து கருமை நிறமான இரத்தம் வெளியேறும்.

இந்நோயில் இருந்து தங்கள் கால்நடைகளைக் காப்பாற்ற வருடத்திற்கு ஒரு முறை அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி அடைப்பான் நோய்க்கான தடுப்பூசிகளை போட வேண்டும்.